வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண்.311/அ1/2023 நாள் :20.01.2023.

பொருள் :- தமிழ்நாடு அமைச்சுப்பணி - இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை -3 ஆகியோர்களுக்கு உதவியாளராகப் பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்குவது - 15.03.2022 நிலவரப்படி தகுதி பெற்றவர்கள் - தற்காலிக முன்னுரிமைப் பெயர் பட்டியல் அனுப்புதல் மற்றும் விடுப்பட்ட பணியாளர் விவரம் கோருதல் - சார்பு.

பார்வை :- சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.000101/அ4/ இ3/2023-1 நாள்.20.01.2023.

-----

பார்வையில் காணும் இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின்படி 15.03.2022 -ல் உள்ளவாறு இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை -3 பதவியிலிருந்து உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்தோர் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்காண் முன்னுரிமைப் பட்டியலில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என சரிபார்த்து, தவறுகள் ஏதேனும் இருப்பின் உடனடியாக இவ்வலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்குமாறும், அதற்குரிய முழு விவரங்கள் மற்றும் தகுந்த ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், மேற்காண் பொருள் தொடர்பாக கீழ்காணும் தேதிக்குள் சமர்ப்பிக்காமல் காலதாமதம் ஏற்படின் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் முழு பொறுப்பு ஏற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சார்ந்த பணியாளர்களின் விவரங்கள் 24.01.2023 அன்று 11.00 மணிக்குள் இவ்வலுவலக "அ1" பிரிவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (குறிப்பு:-மேற்காண் முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தங்கள் இருப்பின் அதன் விவரத்தினை சரிபார்க்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது,)

இணைப்பு:- பெயர் பட்டியல்.

23-01-23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக்கல்வி /தொடக்கக்கல்வி மற்றும் தனியார் பள்ளிகள்). வேலூர் மாவட்டம்.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்துவகை அரசு/நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் , வேலூர் மாவட்டம்.

நகல்:- சென்னை -6. பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்து அனுப்பலாகிறது,

ப.ரா.,